بسم الله الرحمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஸனாயிய்யா, ஜித்தா, சவூதி அரேபியா. இதழ் 5:3 துல்ஹஜ், 1429, பக்கங்கள்=12

P.O.Box-32628, Jeddah-21438, K.S.A,Email : suvanam@gmail.com, www.suvanam.com

## படைப்புகளை ஆராய்வோம்! படைத்தவனை அறிவோம்!

*- தேங்கை முனீஃப், பஹ்ரைன்*

பிறவியிலேயே எதையும் ஆய்ந்தறியக் கூடிய தன்மையில் மனிதன் படைக்கப்பட்டுள்ளான். தன்னையும் தன்னைச் சுற்றியுள்ள பொருட்களையும் குறித்த ஆய்வு அவனது குழந்தைப் பருவம் முதலே ஆரம்பித்து விடுகின்றது. கையிலிருக்கும் விளையாட்டுப் பொருளை உடைத்து அதனுள் என்ன இருக்கிறது என்று அறிய விரும்பும் ஒரு குழந்தையின் செயல் அறிவைத் தேடும் மனித எண்ணத்தின் பிரதிபலிப்பாகும். ஆகாயத்தின் அகண்ட வெளியிலும் அணுவின் துணிக்கைகளிலும் பார்வையைப் பதித்திருக்கும் அறிவியலாளர்களும் இப்பேரண்டத்தின் ரகசியத்தை அறிய தங்கள் பார்வைகளை விரித்து வைத்துள்ளனர்.

விரிந்து பரந்த இப்பிரபஞ்சமெனும் புத்தகத்தின் எந்தப் பக்கத்திலும் அதை உருவாக்கியவனின் பெயர் எழுதி வைக்கப் படவில்லை. ஆனால் பிரபஞ்ச புத்தகத்தின் ஒவ்வொரு எழுத்தும் இதனைப் படைத்தவன் ஒருவன் இருக்கின்றான் என்பதைப் பறைசாற்றுகின்றன! அப்படைப்பாளனின் வல்லமைகள், குணநலன்கள் குறித்த தேவையான விபரங்களை அப்புத்தகத்தின் வாக்கியங்கள் நமக்குக் கற்றுத் தருகின்றன.

சிந்திக்கும் திறன் உள்ளவனே மனிதன்! அண்டப் பெருவெளியின் மையத்தில் நிற்கும் அவனிடம் இயற்கையாகவே சில கேள்விகள் எழுகின்றன. அக்கேள்விகள் அனைத்தும் அவனையும் அவனைச் சூழ்ந்திருக்கும் இப் பெருவெளியைக் குறித்தும் அறிய விரும்பும் அவனது ஆவலை வெளிப்படுத்துவதாகும். அறியாப் பாமரன் முதல் அறிவியலாளன் வரை அனைவரது உள்ளத்திலும் இக்கேள்விகள் எழுகின்றன. மனிதனுக்கு எப்போது அறிவும் சிந்தனையும் வழங்கப்பட்டதோ அன்று முதல் அவன் இக்கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருக்கின்றான். நாகரீக வளர்ச்சியின் படித்தரங்களை ஆராய்ந்தால் இதுவே நமக்குப் புலப்படுகிறது.

மனிதனால் முன்வைக்கப்படும் கேள்விகளில் முதன்மையானது இப்பேரண்டத்தை உருவாக்கியவன் யார்? என்பதாகும். சிகரங்களின் உச்சியிலோ கடலின் அடியிலோ ஆகாயத்தின் வெளியிலோ அவற்றை உருவாக்கியவனின் பெயர் எழுதப்படவில்லை. ஆனால் மலைகள், கடல்கள், ஆகாய வெளி, காற்று, நீர் என ஒழுங்காகப் படைக்கப்பட்டிருக்கும் பெருவெளியின் ஒவ்வொரு அங்கமும் இதற்குப்பின்னால் வல்லமை மிக்க ஒரு படைப்பாளன் இருக்கின்றான் என்பதற்கு அமைதியான சாட்சிகளாக இருக்கின்றன!

மனிதப் படைப்பை ஓர் உதாரணமாகக் கொள்வோம். தந்தையால் வெளிப்படுத்தப்படும் இலட்சக்கணக்கான விந்தணுக்களில் ஒன்றே ஒன்று மட்டும் தாயின் கருவறையில் சினை முட்டையுடன் இணைந்து ஒரு கருவாகிறது! ஆரம்ப நிலையிலிருக்கும் இக் கருவுக்கு தான் பிறந்து செல்லவிருக்கும் வெப்பம், குளிர், காற்று, ஒளி, ஒலி எல்லாம் உள்ள உலகத்தைக் குறித்த எந்த அறிவும் இருப்பதில்லை! ஆனால் இவற்றை எல்லாம்

*தொடர்ச்சி 8 ம் பக்கம் பார்க்க ...*

### உள்ளே!

கடவுள் இருக்கின்றானா? - 3

இஸ்லாமும் பாடல்களும் - 4

ஊடகங்கள் இருட்டிப்பு செய்தவை - 7

இறைமறையில் அறிவியல் அற்புதங்கள் - 9

இறை நினைவுகள் - 11

அறிவுப் போட்டி - 12

## அழைப்பு பணியின் அவசியம்

*- உம்மு யாஸிர்*

மனிதன் இயல்பிலேயே தவறு செய்யக்கூடியவனாகப் படைக்கப்பட்டுள்ளான். பெரும்பாவங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்கள் நபிமார்கள் மட்டுமே! எனவே, தவறு செய்யும் இயல்புடைய மனிதனுக்கு நன்மையை ஏவுவதும் தீமையை குறித்து எச்சரிக்கை செய்வதும் அவசியமாகும்.

மக்கள் நன்மைகளை விட்டும் வெகு வேகமாக வெருண்டோடிக் கொண்டிருக்கின்றனர். தீமைகளில் கிடைக்கும் அற்ப சுகம், உலகாதாயம் என்பவற்றில் கவரப்பட்டு விளக்கை நோக்கிச் செல்லும் விட்டில்களாக தீமைகளை நோக்கி மக்கள் சென்று கொண்டிருக்கின்றனர்.

உதாரணமாக, வட்டி, ஹராம் என்பது இஸ்லாமிய பொருளாதாரக் கோட்பாட்டின் அடிப்படையாகும். இந்த வட்டியின் பக்கம் வாருங்கள் என தொலைக்காட்சி, வானொலி போன்ற தொலைத்தொடர்பு சாதனங்கள் அழைப்பு விடுக்கின்றன. பத்திரிக்கையில் பக்கம் பக்கமாக விளம்பரங்கள், இனிப்பான திட்டங்கள் என அன்றாடம் வெளிவந்து கொண்டிருக்கின்றது. இவ்வாறு தீமைகள் புயலாக விசும்போது உண்மை இறைவிசுவாசி தானுண்டு தன் பாடுண்டு என்று இருக்கமுடியுமா? அவர்களது உடன்பிறப்புகள்,

உற்றார் உறவினர்கள், ஊரார் அனைவரும் அழிவின்பக்கம் விரைந்து சென்று கொண்டிருக்கும் போது, இவர் கண்டு கொள்ளாமல் இருப்பது அறிவுக்கு பொருந்துமா?

இதனை பின்வரும் சம்பவங்கள் எமக்கு உணர்த்துகின்றன. ' சுலைமான் (அலை) அவர்கள் தன் பட்டாளத்துடன் போகும் போது, ஒரு எறும்பு தனது மற்ற எறும்பு கூட்டங்களைப் பார்த்து, "எறும்புகளே! நீங்கள் உங்கள் புற்றுகளுக்குள் நுழைந்து கொள்ளுங்கள். ஸுலைமானும் அவருடைய படையினரும் தாம் அறியாமலேயே உங்களை திண்ணமாக மிதித்து விட வேண்டாம். 27:18 எனக்கூறியது.

இந்த சம்பவம் மூலம் ஓர் எறும்பு தனது மற்றைய எறும்புகள் அழிந்துவிடக்கூடாது என்பதில் காட்டியிருக்கும் அக்கரையை உணரமுடிகிறது. ஓர் எறும்பே சமூக உணர்வுடன் நடந்திருக்கும்போது, எமது சகோதர சகோதரிகள் ஷிர்கிலும் பித்அத்துக்களிலும், ஹராத்திலும் மூழ்கியிருக்கும் போது இந்த செயல்கள் மூலம் தம்மைதாமே அழித்துக் கொள்ளும் காரியங்களில் ஈடுபடும்போது நாம் தடுக்காது இருக்கலாமா? அப்படியிருந்தால் இந்த எறும்பைவிட கீழான நிலைக்கல்லவா சென்றிடுவோம்.!

இதே அத்தியாயம் மற்றுமொரு நிகழ்ச்சியைக் கூறுகின்றது. சுலைமான் (அலை) அவர்கள் தனது படையை பார்வையிட்டுக் கொண்டு வருகிறார்கள். அங்கே ஹுத் ஹுத் என்ற பறவையைக் காணவில்லை. அது தாமதித்து வந்தது. இந்தப் பறவை தாமதித்து வந்ததற்கான காரணத்தை கூறாவிட்டால், அதை அறுத்து விடுவேன் அல்லது கடுமையாக தண்டிப்பேன் என்று கோபத்தோடு கூறுகிறார்கள். அப்போது அந்தப்பறவை சுலைமான் நபியிடம் பின்வருமாறு கூறியது. அதை அல்லாஹ், திருமறையில் இவ்வாறு கூறுகின்றான்.

'அவர் பறவைகளை(ப் பற்றியும்) பரிசீலனை செய்து; "நான் (இங்கே) ஹுது ஹுது(ப் பறவையைக்) காணவில்லையே என்ன காரணம்? அல்லது அது மறைந்தவற்றில் நின்றும் ஆகி விட்டதோ?" என்று கூறினார். "நான் நிச்சயமாக அதைக் கடுமையான வேதனையைக் கொண்டு வேதனை செய்வேன்; அல்லது அதனை நிச்சயமாக அறுத்து விடுவேன்; அல்லது (வராததற்கு) அது என்னிடம் தெளிவான ஆதாரத்தைக் கொண்டு வர வேண்டும்" என்றும் கூறினார். (இவ்வாறு கூறி) சிறிது நேரம் தாமதித்தார்; அதற்குள் (ஹுது ஹுது வந்து) கூறிற்று, "தாங்கள் அறியாத ஒரு விஷயத்தை நான் அறிந்து கொண்டேன். 'ஸபா'விலிருந்து உம்மிடம் உறுதியான செய்தியைக் கொண்டு வந்திருக்கிறேன்." "நிச்சயமாக அ(த் தேசத்த)வர்களை ஒரு பெண் ஆட்சி புரிவதை நான் கண்டேன்; இன்னும், அவளுக்கு (தேவையான) ஒவ்வொரு பொருளும் கொடுக்கப்பட்டுள்ளது; மகத்தான ஓர் அரியாசனமும் அவளுக்கு இருக்கிறது. "அவளும், அவளுடைய சமூகத்தார்களும் அல்லாஹ்வையன்றி, சூரியனுக்கு ஸுஜூது செய்வதை நான் கண்டேன்; அவர்களுடைய (இத்தவறான) செயல்களை அவர்களுக்கு ஷைத்தான் அழகாகக் காண்பித்து, அவர்களை நேரான வழியிலிருந்து தடுத்துள்ளான். ஆகவே அவர்கள் நேர்வழி பெறவில்லை. "வானங்களிலும், பூமியிலும், மறைந்திருப்பவற்றை வெளியாக்குகிறவனும்; இன்னும் நீங்கள் மறைப்பதையும், நீங்கள் வெளியாக்குவதையும் அறிபவனுமாகிய அல்லாஹ்வுக்கு அவர்கள் ஸுஜூது செய்து வணங்க வேண்டாமா? "அல்லாஹ் - அவனையன்றி வணக்கத்திற்குரிய நாயன் (வேறு) இல்லை. (அவன்) மகத்தான அர்ஷுக்கு உரிய இறைவன்" (என்று ஹுது ஹுது கூறிற்று). 27:20,26

இந்தச் செய்தியை கேட்டபின், அந்தப் பெண்ணுக்கு சுலைமான் (அலை) அவர்கள் தஃவா செய்து, அவர் இஸ்லாத்தில் இணைந்ததாக அல்குர்ஆன் கூறுகின்றது.

"இறைவனே! நிச்சயமாக, எனக்கு நானே அநியாயம் செய்து கொண்டேன்; அகிலங்களுக்கெல்லாம் இறைவனான அல்லாஹ்வுக்கு, ஸுலைமானுடன் நானும் (முற்றிலும் வழிபட்டு) முஸ்லிமாகிறேன்" எனக் கூறினாள். 27:44

ஒரு நாட்டு மக்கள் சூரியனை வணங்குவதை கண்டு ஒரு பறவை கவலை கொண்டுள்ளது. நமது சகோர சகோதரிகள் பலர் அறியாமல் கப்ரு வழிபாட்டிலும் ஷிர்க்கான சடங்குகளிலும் மூழ்கியுள்ளனர். இவற்றால் அவர்கள் செய்கின்ற நல்லமல்களை அழித்துக் கொள்வதுடன் தம்மைத்தாமே நரகிற்கு தயார்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இதனை கண்டு எமக்கு சிறிதளவாவது கவலை வரவில்லையென்றால் நாம் இந்தப்பறவையை விட கீழானவர்களாக அல்லவா இருப்போம்.!

ஒருவன் தனது அரசியல் தலைவன் அவமதிக்கப்படுவதை தாங்கிக் கொள்வதில்லை. இவன் சீறுகிறான், தாக்குகிறான் சாதாரண தலைவனையே இப்படி வெறிகொண்டு மதிக்கும் போது ஷிர்க் செய்வதன் மூலம் அல்லாஹ்விற்கு அநீதி இழைக்கப்படுகிறது அல்லாஹ்வின் கட்டளைகள் பகிரகங்மாக மீறப்படுகின்றன, அப்போது அவன் சீறாமல் சிணுங்காமல் சின்னதொரு எதிர்ப்பையும் காட்டாது குறைந்த பட்சம், முகச்சுழிப்பையாவது காட்டாது கல்லுப்போல் நிற்கிறதெனில் இவனது இறைவிசுவாசத்திற்கு அது ஒரு களங்கமாகிறது.

அல்லாஹ்வை முஸ்லிம்களாகிய நாம் ஈமான் கொண்டுள்ளோம். நாம் சத்திய போதனையில் ஈடுபடும்போதுதான் எமது ஈமான் ஏனைய சமூகங்களைவிட சிறப்புப் பெற்றிருக்கின்றோம். இதனை அல்குர்ஆன் தெளிவாக கூறுகின்றது.

மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தில்) சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள்; (ஏனெனில்) நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகிறீர்கள்; தீயதை விட்டும் விலக்குகிறீர்கள்; இன்னும் அல்லாஹ்வின்மேல் (திடமாக) நம்பிக்கை கொள்கிறீர்கள்; வேதத்தையுடையோரும் (உங்களைப் போன்றே) நம்பிக்கை கொண்டிருப்பின், (அது) அவர்களுக்கு நன்மையாகும் - அவர்களில் (சிலர்) நம்பிக்கை கொண்டோராகவும் இருக்கின்றனர்; எனினும் அவர்களில் பலர் (இறை கட்டளையை மீறும்) பாவிகளாகவே இருக்கின்றனர். 3:110

இந்தவகையில் இஸ்லாத்தை இதயத்தில் ஏற்று அதை பிறருக்கும் எடுத்து கூறும்போதுதான் ஒருவன் இஸ்லாம் என்ற கொள்கையில் பற்றுடையவனாக இருக்கமுடியும். அல்லாஹ்வின் மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையின் தராதரத்தை மதிப்பிடும் சாதனமாக இந்த அழைப்பு பணி அமைந்தள்ளது.

# கடவுள் இருக்கின்றானா? (பாகம் - 2)

*- இறைநேசன்*

"சார்! வெப்பமென்று ஒன்று அறிவியலில் இருக்கிறது தானே சார்?"

பேராசிரியர்: "ஹிஹி! இதிலென்ன சந்தேகம்! இருக்கிறது!"

அப்துல்லாஹ்: "குளிர்ச்சியென்று ஒன்றும் அறிவியலில் இருக்கிறதா சார்?"

பேராசிரியர்: "என்னடா கிறுக்குத்தனமா கேக்கிறாய்? அதுவும் இருக்கிறது!"

அப்துல்லாஹ்: "இல்லைங்க சார்! குளிர் என்பது அறிவியலில் இல்லவே இல்லை!"

(வகுப்பு கூர்ந்து கவனிக்கிறது இப்பொழுது!...என்னமோ நடக்கப் போகிறது...)

பேராசிரியர்: "என்ன சொல்கிறாய் நீ?"

அப்துல்லாஹ்: "வெப்பம் நிறைய இருக்கிறது. Super Heat, Latent Heat-ன்னு எல்லாம் இருக்கிறது! ஆனால் Super Cold, Latent Cold-ன்னு ஏதாவது இருக்கிறதா?

வெப்பம் எவ்வளவு வேண்டுமென்றாலும் போகலாம்! பத்தாயிரம் டிகிரி கூட! ஆனால் குளிர் -273,000 டிகிரி வரைக்கும் தான் போக முடியும், அதுக்கு மேலப் போக முடியாது அல்லவா? குளிரென்று ஒன்று இல்லவே இல்லைங்க சார்! வெப்பம் இல்லாமை தான் குளிர்!"

பேராசிரியர்: "ஆமாம் அப்துல்லாஹ், என்ன எதாவது காமெடி பண்ணுகிறாயா நீ?"

அப்துல்லாஹ்: "வெளிச்சமென்று ஒன்று அறிவியலில் இருக்கிறது! இருட்டென்று ஒன்று இருக்கிறதா சார்?"

பேராசிரியர்: "பகலில் வெளிச்சம், இரவில் இருட்டு! ரொம்ப சிம்பிள்! டேய், என்னமோ விளையாடுகிறாய் நீ!"

அப்துல்லாஹ்: "இல்லைங்க சார்! திரும்பவும் தவறு செய்றீங்க! வெளிச்சம் மட்டுமே அறிவியலில் இருக்கிறது! வெளிச்சம் இல்லாமையே இருட்டு! வெளிச்சத்தை எவ்வளவு வேண்டுமென்றாலும் கூட்டலாம்! உங்களால் இருட்டைக் கூட்ட முடியுமா? இல்லையே! வெளிச்சத்தைக் குறைக்கத் தான் முடியும்!"

பேராசிரியர்: "சரி...கரெக்டு தான்! ஆனா...இப்ப என்ன சொல்ல வருகிறாய் நீ?"

அப்துல்லாஹ்: "உங்க அடிப்படையே தவறென்று சொல்கிறேன்!"

பேராசிரியர்: "என்ன? யாரிடம் பேசுகிறாய் என்று தெரிகிறதா?"

அப்துல்லாஹ்: "தெரியும் சார்! அறிவியல் பேராசிரியர் கூடத் தான் பேசுகிறேன்! உங்க தத்துவம் இரட்டைத் தத்துவம்! எதிர்மறைத் தத்துவம் சார்!

நல்லது x கெட்டது, வாழ்வு x சாவு,

அழகு x அசிங்கம், அன்பு x வெறுப்பு - இப்படி!

நல்லது இல்லாததைப் பார்த்துவிட்டு, கெட்டதை ஏன் கடவுள் படைத்தானென்று கேக்குறீங்க!

உங்க அக்கா வாழாததைப் பார்த்துவிட்டு, வெதும்பிப் போய், கடவுள் ஏன் மரணிக்கச் செய்தான் என்று கேக்குறீங்க!

ஸ்கேலில் என் உயரத்தை அளக்கலாம்! என் எடையை அளக்க முடியுமா?

இல்லை என்னிடம் அது தான் இருக்கிறது! அதை வைத்துத் தான் அளப்பேன்! அப்படி அளக்க முடியவில்லையென்றால் எனக்கு எடையே இல்லையென்று சொல்வீர்களா?

கடவுளைச் சரியாக அளக்க உங்களிடம் ஒரு கருவி இல்லை! அதனால் கடவுள் இல்லையென்று ஆகிவிடுமா?"

பேராசிரியர்: "என்னடா சொல்கிறாய் நீ? லாஜிக்கோட தான் பேசுகிறாயா?"

அப்துல்லாஹ்: "ஆமாம் சார்! கண்ணால் பார்க்க முடியுமா? தொட முடியுமா? என்று எல்லாம் கேட்டீங்களே! Magnetism என்ற காந்த சக்தி இருக்கிறது அறிவியலில்! அதைத் தொட முடியுமா? இல்லை கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்த முடியுமா?

ஆனா அது கிளப்பும் விளைவுகளை மட்டும் பார்க்க முடிகிறது! அப்புறம் எதை வைத்து அது காந்த சக்தியென்று சொல்கிறோம்? அது தரும் விளைவை வைத்துத் தானே!

அதே போல் தான் இறைவனும்!

மூலத்தைப் பார்க்க முடியவில்லையென்றாலும், விளையும் விளைவுகளை வைத்து இறைவன் இருக்கிறான் என்று சொல்லுறாங்க!"

(வகுப்பில்...ஆகா..ஈகி-ன்னு ஒரே சத்தம் தூக்குது...)

"நல்லது இல்லாமை தான் கெட்டது! வெளிச்சம் இல்லாமை இருள்! வெப்பம் இல்லாமை குளிர்! அதே போல், தர்மம் இல்லாமை அதர்மம்!

அதர்மத்தை இறைவனும் படைக்கவில்லை! ஷைத்தானும் படைக்கவில்லை! நாம் தான் படைத்தோம்!

நாம் நல்லது செய்கிறதில்லை! அதனால் அது கெட்டதென்று ஆகிவிடுகிறது! கெட்டதை ஏன் இறைவன் படைத்தான் என்று பகுத்தறிவுச் சுடரான நீங்க பகுத்தறியாது கேட்கலாமா?"

(வகுப்பில்...மேசைகள் தட்டப்படுகின்றன...)

அறிஞர்களின் ஆராய்ச்சியைப் படித்துவிட்டு, அந்த ஆராய்ச்சி முறையாகச் செய்யப்பட்ட ஆராய்ச்சியென்று நம்பித் தானே அடுத்த கட்டத்துக்குப் போறீங்க! இல்லையென்றால் ஒவ்வொரு முறையும் பழைய ஆராய்ச்சி எல்லாத்தையும் உங்க கண்ணால் உறுதிப்படுத்திக்கொண்டு, அதன் பிறகுத் தான் மேற்கொண்டு Experiment ஏதாவது செய்ய ஆரம்பிக்கிறீங்களா?"

"டியர் ஃப்ரெண்ட்ஸ், நம்ம பேராசிரியர் மூளையை யாராவது பார்த்து இருக்கீங்களா? தொட்டு, முகர்ந்து, சுவைத்து இருக்கீங்களா?"

(வகுப்பு கொல்லென்று சிரிக்கிறது...)

"கோபித்துக் கொள்ளாதீர்கள் சார்! உங்களை அவமதிக்க வேண்டுமென்று எல்லாம் இப்படிக் கேட்கவில்லை! ஒருத்தருடைய மூளையை இங்கே வேறு யாருமே பார்க்கவில்லை அப்படிங்கிறதுக்காக, அவருக்கு மூளையே இல்லையென்று சொன்னால் எப்படி இருக்கும்?"

(வகுப்பு மீண்டும் கொல்லென்று சிரிக்கிறது...)

(பேராசிரியர் அப்துல்லாஹ்வை எரித்து விடுவது

போல் பார்க்கிறார்)

"இன்னொன்னும் சொல்கிறேன், யாரும் கோபித்துக் கொள்ள கூடாது நண்பர்களே! எல்லோருக்கும் நம்ம அம்மா அப்பா இவர்கள் தான் நம்புகிறோம் தானே!

பொறந்ததிலிருந்து கூடவே இருக்காங்க! அவர்கள் தான் அம்மா அப்பா என்ற நம்பிக்கை ஆழமாகப் பதிந்துவிடுகிறது இல்லையா? அறிவியல் பூர்வமாய் DNA Test காட்டினால் தான் நம்புவோமென்று எல்லோரும் சொல்ல ஆரம்பித்தால் என்னவாகும்?

அந்த அறிவியல் சோதனை எல்லாம் இயல்பு வாழ்க்கைக்கு வைத்துக் கொள்வதில்லை! விதிவிலக்கான சமயங்களின் போது தான் அவற்றைப் பயன்படுத்துகிறோம் இல்லையா? அது போலத் தான் இயல்பு வாழ்க்கைக்கு இறைவனை நாம் D N A பரிசோதனை செய்து கொள்வதில்லை!"

"ஒரு பொருள் இருப்பதற்குச் சான்று இல்லாமை, அதன் இல்லாமைக்குச் சான்றாகி விடாது!

ப்ளூட்டோ-ன்னு ஒரு கிரகம் இருந்ததென்று அறிவியல் பாடத்தில் நாமெல்லாம் படித்தோம்! ஆனால் இப்ப விஞ்ஞானிகள் இல்லையென்று சொல்கிறார்கள்! நம்முடைய பசங்க படிக்கும் பாடப் புத்தகத்தில் ப்ளூட்டோ-ன்னு ஒரு கிரகம் இல்லை. அப்படியென்றால் மொத்த விஞ்ஞானமும் அறிவியலும் பொய்யாகி விடுமா சார்? எதையுமே நம்பக் கூடாதா?"

பேராசிரியர்: "ஹூம்ம்ம்ம்...

ஆராய்ச்சிகளின் மேல் நம்பிக்கை கொள்ள வேண்டும் அப்துல்லாஹ்! மனிதனுக்கும் அறிவியலுக்கும் இணைப்பே அந்த நம்பிக்கை தான்!

அறிவியலால் மனித வாழ்வு மேம்படும் என்ற நம்பிக்கை அவசியம் வேண்டும்!"

அப்துல்லாஹ்: "அதே தான் சார்!

கடவுளின் மேல் நம்பிக்கை கொள்ள வேண்டும் சார்! மனிதனுக்கும் கடவுளுக்கும் இணைப்பே அதே நம்பிக்கை தான்!

ஆன்மீகத்தால் மனித வாழ்வு மேம்படும் என்ற நம்பிக்கை அவசியம் வேண்டும்!

அந்த நம்பிக்கை தான் சார் மனிதர்களை அன்றாடம் உயிர்ப்புடன் நடத்திக் கொண்டிருக்கிறது!"

(பேராசிரியருக்கு ஏதோ புரிவது மாதிரி இருக்கிறது...)

விறகுக்குள் தீ ஒளிந்திருக்கும்! பாலுக்குள் நெய் ஒளிந்திருக்கும்!

பாலைக் காட்டி, இதில் நெய் எங்கே இருக்கென்று கேட்டால் என்ன சொல்ல முடியும்? இல்லை, கடைந்தால் தான் வருமென்று சொல்லலாம்!

இல்லையில்லை! நான் எதுக்குக் கஷ்டப்பட்டுக் கடையணும்? ஒன்னு இருக்கா என்று கேக்கிறேன்! என்னையே வேலை பார்த்துக் கண்டுபிடிக்கச் சொல்றீங்க! யாரை ஏமாற்றப் பாக்குறீங்க? கண் முன்னாடி நெய்யைக் காட்டுங்க பார்க்கலாம்-னு சொல்லுவோமா? அதுக்கு என்ன பண்ணணும்?

இறைவன் நல்லவன் என்பதை ருசித்துப் பாருங்கள்!

உறவு என்னும் கோலை நட வேண்டும்!

உணர்வு என்னும் கயிற்றினால் உள்ளத்தைக் கடையக் கடைய, நெய்தது நிலைப்படும்! இறைவன் புலப்படும்!

# இஸ்லாமும் பாடல்களும் (பாகம் - 2)

*- மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.*

ஆம், நமது பாடகர்கள் பாடும் பல பாடல்களில் ஷிர்க்கியத்தான வார்த்தைகள் மிகத் தெளிவாகவே இருக்கின்றது. உதாரணத்திற்கு ஒரு சிலவற்றை பார்ப்போம்.

பாடகர் நாகூர் E.M. ஹனீபா அவர்கள் பாடும் ஒரு பாடலில், தெளிவாக கூறப்படும் ஷிர்க்கான ஒரு வார்த்தை பின்வருமாறு:

**நமனை விரட்ட மருந்தொன்று விற்குது நாகூர் தர்காவிலே....** என்று பாடுகின்றார்.

நாகூர் தர்ஹாவில் நமனை விரட்ட மருந்து விற்குதாம். அன்பு நாணயம் கொண்டு சென்றால் பெறலாம் குரு நாதர் பதப் பூவிலே என்று பாடகர் பாடியுள்ளார்.

நமன் என்றால் எமன் என்று பொருள். இவ்வாறு தமிழ் அகராதி நூற்களில் காணப்படுகிறது. எமன் என்றால் உயிரை பறிப்பவன். உயிரை பறிப்பவர்கள், மலக்குகள் வானவர்கள். அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறு செய்யமாட்டார்கள். உயிர் பறிக்க வரும் மலக்குகளைக் கூட விரட்டிவிட அங்கு மருந்து விற்கிறது என்றால், அல்லாஹ்வின் கட்டளைக்கு மாற்றமாக அங்கே நிகழ்ச்சி நடக்கிறது என்பது தானே பொருள்.

உண்மையில் நாகூர் மீரானே நமனால் கைப்பற்றப்பட்டு இறந்தபின் தானே நாகூரில் அடக்கம் செய்யப்பட்டுள்ளார்? அவரிடம் போய் நமனை விரட்ட மருந்து கிடைக்கும் என்றால் எப்படிபட்ட பொய்? ஆனால் அல்லாஹ் கூறுவதைக் கேளுங்கள்.

ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் (வாழ்வுக்கும் வீழ்வுக்கும்) ஒரு காலக்கெடு உண்டு அவர்களுடைய கெடு வந்துவிட்டால் அவர்கள் ஒருகணப் பொழுதேனும் பிந்தவும் மாட்டார்கள், முந்தவும் மாட்டார்கள். (அல்குர்ஆன் 7: 34)

ஒருவரின் உயிர் கைப்பற்றப்படும் நேரம் வந்துவிட்டால், கொஞ்ச நேரம் முற்படுத்தப்படவுமாட்டாது, கொஞ்ச நேரம் பிற்படுத்தப்படவுமாட்டாது என திருமறை குர்ஆன் தெளிவாக கூறும் போது, இந்தப்பாடல் அதற்கு முற்றிலும் மாற்றமாக கூறுகின்றது. இவ்வாறு அல்லாஹ்வால் ஏற்கனவே நாள் குறிக்கப்பட்டு விட்ட மரணத்தை யாரும் தள்ளி வைக்கவோ அல்லது நீக்கிவிடவோ முடியுமா? இது குர்ஆனுடன் நேரடியாக மோதவில்லையா? அல்லாஹ்வின் ஆதிக்கத்தில் இன்னுமொரு அல்லாஹ்வின் படைப்புக்கு பங்கு வைத்துக் கொடுக்கும் இணைவைப்பில்லையா? இதை ஒரு முஸ்லிம் இஸ்லாமிய பாடல் என்று கூறி கேட்கலாமா? சிந்தியுங்கள்...

நமன் என்றால் எமன் என்ற பொருளல்ல. மாறாக நோய் என்று தான் பொருள் எனவும் சிலர் கூறுகின்றனர். நோய் என்று பொருள் கொண்டாலும் கூட தவறு தான்.

நோயை விரட்ட மருந்து நாகூர் தர்ஹாவில் விற்கிறது என்றால் தமிழகத்திலுள்ள எல்லா மருத்துவமனைகளையும் மூடிவிடலாமே! ஏன் அரசாங்கத்திற்கு வீண் செலவு. மக்களுக்கு வீண் செலவு. பேசாமல் நாகூர் தர்ஹாவிற்குப் போய் மருந்தையாவது அல்லது நோயையாவது வாங்கிக் கொண்டு வரலாமே?

அல்லாஹ் தான் நோய் நிவாரணம் அளிப்பவன் என்பது தான் இஸ்லாத்தின் அசைக்க முடியாத அடிப்படை.

'நான் நோயுற்றால் அவனே எனக்கு சுகமளிக்கிறான்' (அல்குர்ஆன் 26: 80)

என்று இப்ராஹிம்(அலை) அவர்கள் கூறியதாக அல்லாஹ் கூறுகிறான். எனவே நமன் என்பதற்கு எமன் என்று பொருள் கொண்டாலும் நோய் என்று பொருள் கொண்டாலும் தவறு தான் என அறிந்து கொள்ள முடிகிறது.

இன்னும் ஒரு பாடலையும் கேளுங்கள்.

**'எங்கே எங்கே எங்கள் நாகூர் மீரானே உம் வாசல் தேடி வந்தோம் ஷாஹ் மீரானே'** என்று துவங்கும் பாடலை மற்றொரு முறை ஆழ்ந்து சிந்தனையுடன் கேட்டுப் பாருங்கள். இந்த அடிகளுக்குப் பின்னால் நாகூராரிடம் பலவிதமான உதவிகளைக் கேட்டு பாடகர் பாடியுள்ளார்.

என்றோ இறந்து போனவரிடம் நம் தேவைகளைக் கேட்கலாமா? கூடாதன்றோ? நாகூர் வலி (அல்லாஹ் மிக நன்கறிந்தவன்) உயிரோடு உள்ள போதே நாம் கேட்பதை எல்லாம் தர முடியாது. அல்லாஹ் மட்டுமே அனைத்தையும் தர வல்லவன். அவர் இறந்து போன பின்பு எப்படி நம் தேவைகளை நிறைவேற்றி வைக்க முடியும்? பிரார்த்தனையை அல்லாஹ்விடத்தில் மாத்திரமே பிரார்த்திக்க வேண்டும், அவனைத்தவிர வேறு யாரிடமும் பிரார்த்திக்கக் கூடாது என்று திருமறை கூறுகின்றது. அல்லாஹ் தனக்கு மாத்திரம் செய்யும்படி கட்டளையிடும் ஒரு வணக்கத்தில் அல்லாஹ்வின் படைப்பை சேர்த்துக் கொள்வது அல்லாஹ்விற்கு இணையில்லையா? (ஷிர்க்கில்லையா) பின்வரும் வசனங்கள் அதை தெளிவுபடுத்துகின்றது.

அல்லாஹ் கூறுவதைக் கேளுங்கள்.

1. உங்கள் இறைவன் கூறுகிறான்; 'என்னையே நீங்கள் பிரார்த்தியுங்கள்; நான் உங்(கள் பிரார்த்தனை) களுக்கு பதிலளிக்கிறேன். எவர்கள் என்னை வணங்குவதை விட்டும் பெருமையடித்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் சிறுமையடைந்தவர்களாக நரகத்தில் நுழைவார்கள்.' 40: 60

2. (நபியே!) என் அடியார்கள் என்னைப்பற்றி உம்மிடம் கேட்டால்; 'நிச்சயமாக நான் சமீபமாகவே இருக்கிறேன், பிரார்த்தனை செய்பவரின் பிரார்த்தனைக்கு அவர் பிரார்த்தித்தால் விடையளிக்கிறேன்; அவர்கள் என்னிடமே (பிரார்த்தித்துக்) கேட்கட்டும், என்னையே நம்பட்டும். அப்பொழுதவர்கள் நேர்வழியை அடைவார்கள்' என்று கூறுவீராக. அல்குர்ஆன் 2: 186

நபிமொழிகள்

நீ கேட்டால் அல்லாஹ்விடத்திலேயே கேள், இன்னும் நீ உதவி தேடினால் அல்லாஹ்விடத்திலேயே உதவி தேடு என்பதாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆதாரம்: திர்மிதி

விளக்கம்;: எல்லாத் தேவைகளையும் அல்லாஹ்விடத்தில் மாத்திரம் கேட்கும்படி அல்லாஹுவும் அவனுடைய தூதர் முஹம்மது(ஸல்) அவர்களும் கூறுவது ஒருபுறமிருக்க, மேல்கூறும் பாடல், ஷாஹுல் ஹமிது வலியுல்லாவிடம் (அல்லாஹ் மிக நன்கறிந்தவன்) தேவையை கேட்டு போகச் சொல்லுகின்றது, அல்லாஹுவிற்கு மாத்திரம் பிரார்த்திக்கும்படி சொல்லப்பட்ட வணக்கத்தை, அல்லாஹுவின் படைப்புக்கும் செலுத்தும்படி கூறுவது, அல்லாஹுவிற்கு இணைவைக்கும் செயலில்லாமல் வேறு என்ன?

## அல்லாஹ் அல்லாதவர்களால் எதையும் கொடுக்க முடியாது. அல்லாஹ் கூறுவதைக் கேளுங்கள்

1. அவனே இரவைப் பகலில் புகுத்துகிறான்; பகலை இரவில் புகுத்துகிறான், சூரியனையும் சந்திரனையும் தன் அதிகாரத்திற்குள் வைத்திருக்கின்றான்; இவை அனைத்தும் குறிப்பிட்ட காலத்திட்டப்படியே நடந்து வருகின்றன, அவனே உங்களுடைய இறைவனாகிய அல்லாஹ்; அரசாட்சிகளெல்லாம் அவனுக்குரியதே, அவனையன்றி நீங்கள் எவர்களை பிரார்த்தி(த்து அழை) க்கின்றீர்களோ, அவர்களுக்கு அணுவளவு அதிகாரமும் இல்லை. நீங்கள் அவர்களைப் பிரார்த்தி(த்து அழை) த்தாலும், அவர்கள் உங்கள் பிரார்த்தனையை (அழைப்பை)ச் செவியேற்கமாட்டார்கள், செவியேற்றாலும் கூட உங்களுக்கு பதில் அளிக்கமாட்டார்கள், கியாம நாளில் நீங்கள் இணைவைத்ததையும் அவர்கள் நிராகரித்து விடுவார்கள்; யாவற்றையும் நன்கு அறிபவனைப் போன்று (அவர்கள்) எவருமே உங்களுக்கு அறிவிக்க மாட்டார்கள். 35: 13,14

2. மனிதர்களே! ஓர் உதாரணம் சொல்லப்படுகிறது. எனவே செவிதாழ்த்திக் கேளுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வையன்றி (வேறு) எவர்களை நீங்கள் பிரார்த்திக்கின்றீர்களோ, அவர்களெல்லாம் ஒன்று சேர்ந்தாலும் ஓர் ஈயைக்கூடப் படைக்க முடியாது. இன்னும் அவர்களிடமிருந்து ஒரு பொருளை எடுத்துக் கொண்டு போனால் அவர்களால் அதனை அந்த ஈயிடத்திலிருந்து திரும்பக் கைப்பற்றவும் முடியாது. தேடுவோனும், தேடப்படுவோனும் பலஹீனர்களே. 22: 73

3. நிச்சயமாக அல்லாஹ்வையன்றி எவர்களை நீங்கள் அழைக்கின்றீர்களோ, அவர்களும் உங்களைப் போன்ற அடிமைகளே; நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் நீங்கள் அவர்களை அழைத்துப் பாருங்கள் - அவர்கள் உங்களுக்கு பதில் அளிக்கட்டும்! 7: 194

4. "நீங்கள் அழைக்கும் அல்லாஹ் அல்லாதவற்றை கவனித்தீர்களா? பூமியிலுள்ள எதை அவை படைத்துள்ளன, அல்லது அவற்றுக்கு வானங்களில் ஏதாவது பங்கு உண்டா? என்பதை எனக்குக் காண்பியுங்கள்! நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், இதற்கு, முன்னேயுள்ள ஒரு வேதத்தையோ அல்லது (முன்னோர்களின்) அறிவு ஞானங்களில் மிஞ்சிய ஏதேனும் பகுதியையோ (உங்கள் கூற்றுக்கு ஆதாரமாக) என்னிடம் கொண்டு வாருங்கள்!" என்று (நபியே!) நீர் கூறுவீராக. கியாம நாள்வரை (அழைத்தாலும்) தனக்கு பதில் கொடுக்க மாட்டாத - அல்லாஹ் அல்லாதவர்களை அழைப்பவர்களைவிட வழி கெட்டவர்கள் யார்? தங்களை அழைப்பதையே அவர்கள் அறியமுடியாது. 46:4,5

5. மேலும், அல்லாஹ் உண்மையைக் கொண்டே

தீர்ப்பளிப்பவன். அன்றியும், அவனையன்றி அவர்கள் (வேறு) எவர்களை அழைத்(துப் பிரார்த்தித்)தார்களோ, அவர்கள் யாதொரு விஷயத்தைப் பற்றியும் தீர்ப்புச் செய்ய மாட்டார்கள் - நிச்சயமாக அல்லாஹ் (யாவற்றையும்) செவியேற்பவனாகவும், தீர்க்கமாகப் பார்ப்பவனாகவும் இருக்கின்றான். அல்குர்ஆன் 40: 20

விளக்கம்: அல்லாஹ் அல்லாதவர்களிடம் நாம் ஏதாவது ஒரு தேவையைக் கேட்டு பிரார்த்தித்தால் அல்லது ஒரு ஆபத்திலிருந்து பாதுகாப்புத் தேடினால், நாம் அவர்களிடம் கேட்கும் எந்த விஷயத்தையும் அவர்களால் செவிமடுக்கவோ, உணரவோ முடியாது என்பதே ஒரு முஸ்லிமின் நம்பிக்கையாக இருக்க வேண்டும். ஆனால் இதற்கு மாறாக நாம் கப்ரில் உள்ளவர்களிடம் பிராத்தித்தால் அதை அவர்களால் செவிமடுக்கவும் உணரவும் முடியும் என்று மேற்கூறும் பாடல் கூறுகின்றது,

மனமுறண்டாக சொல்லப்படுவதை ஒரு வாதத்திற்கு ஏற்றுக் கொண்டாலும், அவர்களால் நமக்கு எந்த உதவியையும் கியாம நாள் வரை செய்ய முடியாது. அவர்களால் அல்லாஹ்வின் அற்ப படைப்பாகிய ஒரு ஈயைக்கூட படைக்க முடியாது, அவர்களிடமிருந்து ஈ எதையாவது எடுத்துச் சென்றால் அதை அவர்களால் மீட்டவும் முடியாது, இப்படிப்பட்ட இயலாதவர்களிடம் கேட்பவர்களைவிட முட்டாள் யாரும் இருக்க முடியமா? போன்ற பல உதாரணங்களைக்கூறி சிறுவர்களும் விளங்குமளவிற்கு அல்லாஹ் திருமறையில் தெளிவுபடுத்தியிருக்கின்றான். அல்லாஹ்வின் நல்லடியார்களிடம் பிரார்த்தித்து அல்லாஹ்விற்கு ஷிர்க் வைத்ததையும் அந்த நல்லடியார்கள் நாளை மறுமையில் மறுத்துவிடுவார்கள் என்ற கருத்துக்களை பொதிந்துள்ள எத்தனையோ இறை வசனங்களுக்கு இந்தப் பாடல் முரண்படவில்லையா?

## அல்லாஹ் அல்லாதவர்களால் எதையும் தடுக்கவும் முடியாது அல்லாஹ் கூறுவதைக் கேளுங்கள்

1. வானங்களையும், பூமியையும் படைத்தவன் யார்? என்று நீர் அவர்களைக் கேட்பீர்களாயின்; "அல்லாஹ் தான்!" என்று அவர்கள் நிச்சயமாகக் கூறுவார்கள்; (நபியே!) நீர் சொல்வீராக "அல்லாஹ் எனக்கு ஏதேனும் ஒரு கெடுதி செய்ய நாடினால் நீங்கள் (பிரார்த்தித்து) அழைக்கும் அல்லாஹ் அல்லாதவை அக்கெடுதியை நீக்கிவிட முடியுமா? அல்லது அவன் எனக்கு ரஹ்மத் செய்ய நாடினால்; அவனுடைய (அந்த) ரஹ்மத்தை அவை தடுத்துவிட முடியுமா? என்பதை நீங்கள் கவனித்தீர்களா?" (நபியே!) மேலும் நீர் கூறுவீராக "அல்லாஹ்வே எனக்குப் போதுமானவன்; உறுதியாக நம்பிக்கை வைப்போரெல்லாம், அவன் மீதே உறுதியாக நம்பிக்கை கொள்ளல் வேண்டும்." 39: 38

2. கஷ்டத்திற்குள்ளானவன் அவனை அழைத்தால் அவனுக்கு பதில் கொடுத்து, அவன் துன்பத்தை நீக்குபவனும், உங்களை இப்பூமியில் பின்தோன்றல்களாக ஆக்கியவனும் யார்? அல்லாஹ்வுடன் (வேறு) நாயன் இருக்கின்றானா? (இல்லை) எனினும் (இவையெல்லாம் பற்றி) நீங்கள் சிந்தித்துப் பார்ப்பது மிக்க குறைவே யாகும். 27:62

3. அல்லாஹ் ஒரு தீமையை உம்மைத் தீண்டும்படி செய்தால் அதை அவனைத் தவிர (வேறு எவரும்) நீக்க முடியாது. அவன் உமக்கு ஒரு நன்மை செய்ய நாடிவிட்டால் அவனது அருளைத் தடுப்பவர் எவருமில்லை; தன் அடியார்களில் அவன் நாடியவருக்கே அதனை அளிக்கின்றான் - அவன் மிகவும் மன்னிப்பவனாகவும், மிக்க கருணையுடையவனாகவும் உள்ளான். 10:107

4. "(நபியே!) அல்லாஹ் உமக்கு ஏதாவதொரு துன்பத்தை ஏற்படுத்திவிட்டால் அவனைத் தவிர (வேறு யாரும்) அதை நீக்க முடியாது. இன்னும் அவன் ஒரு நன்மையை உண்டாக்கிவிட்டால், (அதை எவரும் தடுக்க முடியாது.) அவன் எல்லாப் பொருட்கள் மீதும் பேராற்றலுடையவனாக இருக்கின்றான். 6:17

5. அல்லாஹ் ஒரு தீமையை உம்மைத் தீண்டும்படி செய்தால் அதை அவனைத் தவிர (வேறு எவரும்) நீக்க முடியாது. அவன் உமக்கு ஒரு நன்மை செய்ய நாடிவிட்டால் அவனது அருளைத் தடுப்பவர் எவருமில்லை தன் அடியார்களில் அவன் நாடியவருக்கே அதனை அளிக்கின்றான் - அவன் மிகவும் மன்னிப்பவனாகவும், மிக்க கருணையுடையவனாகவும் உள்ளான். 10:107

விளக்கம்: அல்லாஹ் அல்லாதவர்களால் நாம் கேட்கும் ஒன்றை கொடுக்கவும் முடியாது அல்லது நமக்கு வரும் எந்த ஆபத்தையும் அவர்களால் தடுக்கவும் முடியாது என்பதை மேற்கூறப்பட்ட இறைவசனம் தெளிவுபடுத்துகின்றது. இதற்கு மாறாக நமது சமுதாயத்திடம் அதுவும் பெண்களிடம் அதிகம் மொழியப்படக்கூடிய ஒரு வார்த்தைதான் 'யா முஹ்யித்தீன்' என்னும் வார்த்தை. அதாவது தன் கையில் இருக்கும் ஒரு பொருள் விழும்போது அல்லது கால்வழுக்கி கீழே விழப்போகும் போது அல்லது தனது பிள்ளை விழப்போகும் போது அல்லது இது போன்ற நிலைகள் ஏற்படும் போது திடீரென்று 'யா முஹ்யித்தீன்' என்று கூறிவிடுவார்கள். இந்த வார்த்தையின் கருத்து என்னவென்றால், எங்களுக்கு நிகழப்போகும் இந்த ஆபத்திலிருந்து முஹ்யித்தீன் என்றழைக்கப்படும் பக்தாதில் அடங்கப்பட்டிருக்கும் அப்துல் காதிர் ஜைலானி அவர்களே! எங்களை பாதுகாத்திடுங்கள் என்பதாகும். பக்தாதில் அடங்கப்பட்டிருக்கும் அல்லாஹ்வின் நல்லடியாரான அப்துல் காதிர் ஜெய்லானி(ரஹ்) அவர்கள் நாம் இவ்வளவு தூரத்திலிருந்து பலர் பல மொழிகளில் அழைப்பதை அவர்களால் கேட்க முடியுமா?

இப்படி அல்லாஹ்விடத்தில் மாத்திரமே பிரார்த்திக்க வேண்டும், அவன் அல்லாதவர்களிடம் பிரார்த்திக்கக்கூடாது, அல்லாஹ் அல்லாதவர்களிடம் நாம் பிரார்த்தித்து கேட்டாலும், அவர்களால் எந்த நன்மையையும் நமக்குச் செய்யவும் முடியாது, ஒரு ஆபத்திலிருந்து நம்மை அவர்களால் தடுக்கவும் முடியாது என்ற தெளிவான இறைவசனங்களையும் நபிமொழிகளையும் நாம் கேட்டபின்பும் முற்றிலும் இத்தனை வசனங்களுடனும் நபிமொழிகளுடனும் மோதக்கூடிய பாடல்களை, எப்படி இஸ்லாமிய பாடல் என்று கேட்பது?

இப்படியான நம்பிக்கை ஒரு முஸ்லிமிடம் இருக்கத்தான் முடியுமா? அப்படி இருந்தால் அவருடைய ஈமானின் நிலை என்ன? இந்த நம்பிக்கை மேற்கூறப்பட்ட இறைவசனங்களுடன் மோதுகின்றதே? இன்னும் இதுபோன்றே பல கேள்விகளுக்கு உள்ளாகின்றதே? மேற்கூறப்பட்ட இறைவசனங்களும் நபிமொழிகளும் இப்படிப்பட்டவர்களுக்கு விடை தருகின்றது.

தொடரும் இன்ஷா அல்லாஹ்

# ஊடகங்கள் இருட்டடிப்பு செய்தவை!

*- தேங்கை முனீஃப், பஹ்ரைன்*

எங்கேனும் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நடந்தால் சற்றும் யோசிக்காமல் முஸ்லிம் தீவிரவாதிகள் இஸ்லாமியத் தீவிரவாதம் என்று செய்திகளை வெளியிட்டு முஸ்லிம்களைத் தீவிரவாதிகளாகச் சித்தரிக்க ஊடகங்கள் தயங்குவதில்லை. மாலேகானில் நடத்தப்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவம் திட்டமிட்டு சங் பரிவார் பயங்கரவாதிகளால் நடத்தப்பட்டமை இன்று வெட்ட வெளிச்சமாகியுள்ளது. ஒட்டுத் தாடிகளுடன் இஸ்லாமிய வேடமிட்டு குண்டு வெடிப்பு நடத்தி முஸ்லிம்களைக் குற்றவாளிகளாக்க முயன்றவர்களின் சதியை வல்ல இறைவன் அம்பலப் படுத்திவிட்டான்! ஆனால் வழக்கமாக ஊடகங்களின் பார்வையில் இது ஒரு செய்தியாகப் படவில்லை. டெல்லி குண்டு வெடிப்பில் பக்கம் பக்கமாக எழுதி இஸ்லாமைத் தூற்றிய இந்தியா டுடே ஆகட்டும், பள்ளிவாசலில் குண்டு வெடித்தால் பள்ளி வாசலில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்தது என்று செய்தியைத் திரித்து வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் பாசிஸப் பத்திரிக்கை தினமலராகட்டும், எதுவுமே இன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ள மாலேகான் குண்டு வெடிப்பு பற்றிய செய்திகளில் அவ்வளவு அக்கரை காட்டவில்லை. காரணம் வெளிப்பட்டிருப்பது மறைக்கப்பட்டிருந்த அவர்களின் கோர முகங்கள்!

குண்டு வெடிப்பில் அதிகம் பேர் கொல்லப்படவில்லை என்பதற்காகக் கவலை கொள்ளும் பெண் (சாத்தவி?) பயங்கரவாதி பரக்யாசிங் தாக்கூராகட்டும், அவளுக்கு சுக்கான் பிடிக்கும் பா.ஜ.க, விஸ்வ இந்து பரிசத் இந்துத்துவ வாதிகளாகட்டும், அப்பாவிகளைக் கொல்லக் கூடாது என்ற எந்த இங்கிதமும் இவர்களுக்குக் கிடையாது. இதனால் தான் கைதானவர்கள் விடுதலையாக சங்பரிவார் துடித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் முஸ்லிம்களைத் தீவிரவாதிகளாகச் சித்தரிக்கும் ஊடகங்கள் தீவிரவாதத்துக்கு எதிரான ஒழுக்கப் பயிற்சிகளும், பொதுக் கூட்டங்களும், மாநாடுகளும், கருத்தரங்கங்களும் அதிக அளவில் நடத்துவது முஸ்லிம்கள் தான் என்பதை மறந்து விடுகின்றன. இஸ்லாமிய அறிஞர்களின் தலைமையில் நடைபெறும் இத்தகைய நிகழ்ச்சிகளில் ஏராளமான இளைஞர்கள் பங்கு பெற்று ஒழுக்கமுள்ள சமுதாயமாக முஸ்லிம் சமுதாயம் ஒரு பக்கம் வளர்ந்து வரும்போது இன்னொரு பக்கம் சங்பரிவார் தன் தொண்டர்களுக்கு ஆயுதப் பயிற்சியும், வெடிகுண்டு வைக்கும் பயிற்சியும் அளித்து வருகிறது. இவை அத்தனையும் ராணுவத்தின் உதவியுடன் நடைபெறுகிறது. ராணுவத்தில் உயர் பதவி வகிப்பவர்கள் கூட இவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கும் அளவுக்கு இந்திய ராணுவத்தில் பயங்கரவாத நோய் பீடித்துள்ளது.

இப்போது இந்த குண்டு வெடிப்புடன் தொடர்புடைய ராணுவத்தில் இன்டலிஜன்ஸ் பிரிவில் பணியாற்றிய லெஃப்டினெண்ட் கேணல் பிரசாத் புரோகித் என்பர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் கஷ்மீரில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது ராணுவத்தின் நிதியிலிருந்து ரகசியமாக பணத்தை தீவிரவாத இயக்கங்களுக்கு மாற்றியுள்ளார். இந்த வழக்கில் முக்கியக் குற்றவாளியாகிய ஸமீர் குல்கர்னி என்பவன் பல முறை கஷ்மீரில் வைத்து இவரை சந்தித்ததும் வெளிப்பட்டுள்ளது. (செய்திஃ மாத்யமம்)

சங்கப் பரிவார் திட்ட மிட்டு தன் தொண்டர்களை ராணுவத்தில் சேர ஊக்குவித்து வருகிறது. கஷ்மீரில் தீவிரவாதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் மிகப்பெரிய ராணுவ அதிகாரிகளின் உதவியுடன் சங்பரிவார் தீவிரவாதிகளுக்குக் கடத்தப்பட்டிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

இது ஒரு புறமிருக்க இத்தகைய சம்பவங்களைக் காரணம் காட்டி முஸ்லிம் இளைஞர்களை காவல் துறை வேட்டையாடி வருகிறது. முஸ்லிம் இளைஞர்களை பிடித்துச் சென்று பின்னர் சுட்டுக் கொலை செய்து விட்டு என்கவுண்டர் என்று திருப்பி விடுகிறது. பத்திரிக்கைகளும் முஸ்லிம் தீவிரவாதிகள் சுட்டுக் கொலை என்று தலைப்புச் செய்திகள் வெளியிடுகிறது. ஜாமிஆ நகரில் இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் படித்துக் கொண்டிருக்கும் அப்பாவி மாணவர்கள் என்பது வெட்ட வெளிச்சமாகியுள்ளது. இது போன்று இன்னொரு சம்பவத்தை நிறைவேற்ற, மாறு வேடத்தில் காரில் வந்து இளைஞர்களைக் கடத்திச் செல்ல முற்பட்ட போலீஸ் அதிகாரி டெல்லியில் பிடிபட்டுள்ளார். இப்படிப் பட்ட போலி என்கவுண்டர்கள் ஏராளம். இவ்வாறு செய்திகளை வெளியிடும் பத்திரிக்கைகள் முஸ்லிம்கள் குற்றமற்றவர்கள் என்று நிருபணமானால் மட்டும் செய்திகளை இருட்டடிப்பு செய்து விடுகின்றன.

அவ்வாறு இருட்டடிப்புச் செய்யப்பட்ட ஒரு செய்திதான் ஹைதராபாத் மக்கா மஸ்ஜிதில் கடந்த வருடம் நடந்த குண்டு வெடிப்பில் கைது செய்யப்பட்ட அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் குற்றமற்றவர்கள் என விடுதலை செய்யப்பட்ட சம்பவம்.

இவர்கள் மீது சுமத்தப்பட்ட வழக்குகளில் குற்றத்தை நிரூபிப்பதில் அரசு வழக்குரைஞர் தோல்வியடைந்து விட்டதாக நீதி மன்றம் கூறுகிறது. இவர்களுக்கு இழப்பீடாக உதவித் தொகைகளும் ஆட்டோவும் அரசாங்கம் வழங்குவதாக உறுதி செய்துள்ளது.

இதில் கைது செய்யப்பட்ட ஒருவரை அரக்கத் தனமாக சித்திரவதை செய்து, குண்டு வைத்ததாக ஒப்புக் கொள்ளவில்லையெனில் என்கவுண்டர் நடத்தி விடுவதாக காவல் துறை மிரட்டியதை விடுதலையான இம்ரான் என்ற இளைஞர் கூறுகிறார். (நன்றிஃ சத்திய மார்க்கம்.காம்)

ஆக ராணுவம் முதற்கொண்டு காவல்துறை வரை கொடிய எண்ணமுடையவர்கள் செயல்பட்டுக் கொண்டிருப்பது இதன் மூலம் தெரிய வருகிறது.

இதற்கிடையில் மாலேகான் குண்டு வெடிப்பை நிகழ்த்தியவர்கள் தான் மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பையும் நடத்தியிருக்கக் கூடும் என்று இவ்வழக்கை விசாரித்து வரும் அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர். இது குறித்து இப்போது விசாரணை மேற்கொள்ளப் போவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மறைக்கப்பட்ட இந்து பயங்கரவாதத்தின் கோர முகம் இதிலிருந்து வெளிப்பட்டுள்ளது. எனினும் ஊடகங்கள் இதிலும் ஒரு சார்பு நிலையைத் தான் கடைபிடித்து வருகிறது. முஸ்லிம் சமுதாயம் தனக்கென ஒரு உறுதியான செய்தி ஊடகத்தை உருவாக்குவதன் அவசியத்தை இது உணர்த்துகிறது.

*படைப்புகளை ஆராய்வோம்...முதல் பக்கத் தொடர்ச்சி...*

அறிந்து கொள்ள உதவும் திசுக்களாக சுயமாகவே பெருக்கமடைகிறது! ஒன்றாக இருந்தது சுயமாகவே 600000000000000 (6X10) திசுக்களாகப் பெருக்கமடைகின்றன. இதயம், நுரையீரல், இரைப்பை முதலான உடலின் உள்ளுறுப்புகள் உருவாகின்றன.. எல்லாவற்றுக்கும் மேலாக இவற்றையெல்லாம் நிர்வகிக்கின்ற மிகப்பெரிய அற்புதமாகிய மூளை உருவாகின்றது! எவ்வாறு இது நடைபெறுகிறது? அற்பமான, புறக்கண்ணால் பார்க்க இயலாத வேறுபட்டிருந்த இரு அணுக்களை ஒன்றிணையச் செய்து, இவ்வளவு அற்புதச் செயல்களை நடைபெறச் செய்பவன் யார்? இவற்றக்குப் பின்னால் உள்ள ஒரு படைப்பாளனை ஏற்றுக் கொள்வதன்றோ அறிவுடைமை?

சிந்தனை செய்து இறைவனைப் பற்றி அறிந்து கொள்ள குர்ஆன் அழைக்கிறது!

படைப்புகளைப் பற்றிய சிந்தனையின் மூலம் படைத்தவனின் உள்ளமையை அறிந்து கொள்ளுங்கள் என்ற அறிவுப்பூர்வமான கோட்பாடைத் திருக்குர்ஆன் கூறுகிறது.

أَفَلَا يَنظُرُونَ إِلَى الْإِبِلِ كَيْفَ خُلِقَتْ وَإِلَى السَّمَاءِ كَيْفَ رُفِعَتْ وَإِلَى الْجِبَالِ كَيْفَ نُصِبَتْ وَإِلَى الْأَرْضِ كَيْفَ سُطِحَتْ

ஒட்டகத்தை, அது எவ்வாறு படைக்கப் பட்டுள்ளது என அவர்கள் (கவனித்துப்) பார்க்க வேண்டாமா? வானத்தை, அது எவ்வாறு உயர்த்தப் பட்டுள்ளதென்றும், மலைகள், அவை எவ்வாறு நடப்பட்டுள்ளனவென்றும். பூமி, அது எவ்வாறு விரிக்கப்பட்டுள்ள தென்றும் அவர்கள் (கவனித்துப்) பார்க்க வேண்டாமா?

பரந்து வியாபித்திருக்கும் பேரண்டப் பெருவெளியின் அழகிய படைப்பைக் குறித்து ஆராய்வதன் மூலம் இதற்குப் பின்னாலிருக்கும் மாபெரும் படைப்பாளனின் அதியற்புத சக்தியை விளங்கிக் கொள்ள இயலும்! கற்பனைக் கதைகளுடனும் புரியாத தத்துவங்களுடனும் கடவுளைக் கற்பித்த புராதன கால கட்டத்திலேயே இஸ்லாம் இம்மாபெரும் பிரபஞ்ச நாதனின் வல்லமைகளைக் குறித்த அறிவுப் பூர்வமான விளக்கங்களை அளித்தது! கண்ணை மூடிக் கொண்டு கடவுளை நம்ப வேண்டும் என்பதை விட படைத்தவனைக் குறித்து அறிந்து நம்பிக்கை கொள்ள வேண்டும் என்ற உயர்ந்த தத்துவத்தை இஸ்லாம் கற்றுத் தருகிறது. இறை கொள்கையில் இஸ்லாம் நமக்குக் கற்றுத் தரும் இத்தகைய உயர்ந்த கொள்கை இன்று நடைமுறையில் உள்ள எந்த மதத்திலும் கிடையாது என்பது இஸ்லாமினுடைய தனிச்சிறப்புகளில் ஒன்றாகும். தன்னைப் பற்றியும் தன்னைச் சூழ்ந்துள்ள பிரபஞ்சத்தைக் குறித்தும் ஆராய்வதன் மூலம் இதற்குப் பின்னாலிருக்கும் அந்த இறைவனின் மகத்துவத்தைப் புரிந்து கொள்ளுமாறு மனிதனுக்கு அழைப்பு விடுக்கும் குர்ஆனிய வசனங்கள் பாமரர் முதல் விஞ்ஞானிகள் வரை புரிந்து கொள்ளக் கூடிய அளவில் தெளிவாகவும் எளிதாகவும் உள்ளது. நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு முதன் முதலில் அருளப்பட்ட வசனங்களைப் பாருங்கள்

اقْرَأْ بِاسْمِ رَبِّكَ الَّذِي خَلَقَ خَلَقَ الْإِنسَانَ مِنْ عَلَقٍ اقْرَأْ وَرَبُّكَ الْأَكْرَمُ الَّذِي عَلَّمَ بِالْقَلَمِ

(யாவற்றையும்) படைத்த உம்முடைய இறைவனின் திருநாமத்தைக் கொண்டு ஓதுவீராக 'அலக்' என்ற நிலையிலிருந்து மனிதனை படைத்தான். ஓதுவீராக: உம் இறைவன் மாபெரும் கொடையாளி. அவனே எழுது கோலைக் கொண்டு கற்றுக் கொடுத்தான். (96: 1-4)

மேற்கண்ட வசனங்கள் மனிதனின் சிந்தனை உணர்வைத் தட்டியெழுப்பக் கூடியதாக உள்ளன.

இவ்வுலகில் மனிதனாகப் பிறப்பதற்கு முன் நம் நிலை எவ்வாறிருந்தது? நம் தந்தையின் உடலில் உள்ள கோடிக்கணக்கான விந்தணுவில் ஒரு அணுவாக, தாயின் சினைப்பையில் உள்ள கருமுட்டைகளில் ஒரு முட்டையாக வேறுபட்டுக் கிடந்த ஒரு ஆன்மா. பின்னர் விந்தணுவும் சினை முட்டையும் இணைந்த ஒரு கருவாக. பின்னர் முதிர்ச்சியடைந்த தசைப் பிண்டமாக. பின்னர் அதில் எலும்புகளும் மஜ்ஜைகளும் உருவாகி கண், காது மூக்கு, கை, கால் என எல்லா உறுப்புகளும் உருவாகி ஒரு முழு மனிதனாகப் பிறந்து வருகிறோம். இவ்வுலகில் உள்ள கோடிக்கணக்கான மனிதர்களுள் ஒரு மனிதனாக நாமும் வாழ்கிறோம்! நம்முடைய உடலில் பல்வேறு செயல்பாடுகள். எலும்பு மண்டலம், நரம்பு மண்டலம், சுவாச உறுப்புகள், ஜீரண உறுப்புகள், நோய் எதிர்ப்பு என வியக்கத் தக்க செயல்பாடுகள் நடை பெறுகின்றன. இன்னின்னவாறு செயல்படுங்கள் என்று நாம் அவ்வுறுப்புகளுக்குக் கட்டளையிடுவதில்லை! நாம் சாப்பிடுகிறோம், ஜீரணமாகிறது. உடலுக்குத் தேவையான சக்திகளை உணவிலிருந்து தயாரிக்க உறுப்புகள்! கழிவை வெளியேற்ற, இரத்தத்தைச் சுத்தீகரிக்க, சிந்திக்க, செயல்பட, எழுத, பேச என அனைத்தும் உடல் உறுப்புகளின் ஒன்றோடொன்று ஒத்துழைக்கும் வியத்தகு செயல்பாடுகள்! யாருடைய செயல்பாடு இதற்குப் பின்னால் உள்ளன? கண்ணுக்குத் தெரியாத கற்பனை செய்ய முடியாத இரு வேறு கூறுகளாகப் பிரிந்து கிடந்த விந்தணுவையும் சினை முட்டையையும் இணைத்து நம்மைப் படிப்படியாக வளரச் செய்து முழு மனிதனாக்கிய அவ்விறைவனின் அதியற்புத ஏற்பாடு இது! இவ்வாறு படைத்த இறைவனே நம்மைப் படைத்த விதத்தை எடுத்துக்கூறி நம்மை சிந்திக்கச் சொல்கிறான். அறியாத பாமரன் முதல் அறிவியலாளன் வரை இத்தகைய சிந்தனையால் தன் இறைவனைப் பற்றி அறிய உதவும் எளிய கோட்பாடை குர்ஆன் கற்றுத் தருகிறது. இதோ வல்லமை மிக்கவனாகிய அந்த இறைவன் குர்ஆனில் மக்களைப் பார்த்துக் கேட்கின்றான்.

كَيْفَ تَكْفُرُونَ بِاللَّهِ وَكُنتُمْ أَمْوَاتاً فَأَحْيَاكُمْ ثُمَّ يُمِيتُكُمْ ثُمَّ يُحْيِيكُمْ ثُمَّ إِلَيْهِ تُرْجَعُونَ

நீங்கள் எப்படி அல்லாஹ்வை நம்ப மறுக்கிறீர்கள்? உயிரற்றோராக இருந்த உங்களுக்கு அவனே உயிரூட்டினான்; பின்பு அவன் உங்களை மரிக்கச்செய்வான்; மீண்டும் உங்களை உயிர் பெறச் செய்வான்; இன்னும் நீங்கள் அவன் பக்கமே திருப்பிக்கொண்டுவரப் படுவீர்கள். (2:28)

وَلَقَدْ خَلَقْنَا الْإِنسَانَ مِن سُلَالَةٍ مِّن طِينٍ ثُمَّ جَعَلْنَاهُ نُطْفَةً فِي قَرَارٍ مَّكِينٍ ثُمَّ خَلَقْنَا النُّطْفَةَ عَلَقَةً فَخَلَقْنَا الْعَلَقَةَ مُضْغَةً فَخَلَقْنَا الْمُضْغَةَ عِظَامًا فَكَسَوْنَا الْعِظَامَ لَحْمًا ثُمَّ أَنشَأْنَاهُ خَلْقًا آخَرَ فَتَبَارَكَ اللَّهُ أَحْسَنُ الْخَالِقِينَ

நிச்சயமாக நாம் (ஆதி) மனிதரைக் களி மண்ணிலிருந்துள்ள சத்தினால் படைத்தோம். பின்னர்

நாம் அவனை ஒரு பாதுகாப்பான இடத்தில் இந்திரியத் துளியாக்கி வைத்தோம். பின்னர் அந்த இந்திரியத் துளியை அலக் என்ற நிலையில் ஆக்கினோம்; பின்னர் அந்த அலக்கை ஒரு தசைப் பிண்டமாக்கினோம்; பின்னர் அத்தசைப்பிண்டத்தை எலும்புகளாகவும் ஆக்கினோம்; பின்னர், அவ்வெலும்புகளுக்கு மாமிசத்தை அணிவித்தோம் பின்னர் நாம் அதனை வேறு ஒரு படைப்பாக (மனிதனாகச்) செய்தோம். (இவ்வாறு படைத்தவனான) அல்லாஹ் பெரும் பாக்கியமுடையவன் (படைப்பாளர்களில் எல்லாம்) மிக அழகான படைப்பாளன். (23:12-14)

أَفَرَأَيْتُم مَّا تُمْنُونَ أَأَنتُمْ تَخْلُقُونَهُ أَمْ نَحْنُ الْخَالِقُونَ

(கர்ப்பப் பையில்) நீங்கள் செலுத்தும் இந்திரியத்தைக் கவனித்தீர்களா? அதை நீங்கள் படைக்கிறீர்களா? அல்லது நாம் படைக்கின்றோமா? (56: 58, 59)

# இறைமறையில் அறிவியல் அற்புதங்கள் (பாகம் - 3)

*- டாக்டர் ஷேக் சையது M.D.*

கடந்த மாத தொடரில் மண் கலவையிலிருந்து எடுக்கப்பட்ட மூலத்தில் முதல் மனிதர் படைக்கப்பட்டார் என்ற உண்மையைப் புரிந்து கொண்டோம். இந்த மாதஇதழின் தொடரில் அவரது சந்ததிகளான மனிதர்கள் எவ்வாறு படைக்கப்படுகின்றனர் என்ற தகவல் பற்றி குர்ஆன் என்ன கூறுகிறது என்று அறிந்து கொள்வோம். முதல் மனிதர் படைக்கப்பட்டது போல அவரது சந்ததிகளையும் மண்ணின் மூலத்திலிருந்து நேரடியாக படைக்கப்பட வில்லை என்பது தெளிவான உண்மை. தொடர்ந்து உற்பத்தியாகும் மரபணுக்கள் வழியாக இனப்பெருக்கம் நடை பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் முதல் மனிதரைப் போலவே அவரது சந்ததிகளும் மண்ணின் மூலத்திலிருந்து படைக்கப்படுகின்றனர் என்றால் ஒவ்வொரு மனிதனின் படைப்பிற்கும் ஒரு நீண்ட கால அவகாசம் தேவைப்படும். அது நடை முறைக்கு சாத்தியமற்றது.

எனவே மனிதர்களின் மரபணுக்கள் மூலம் இனப்பெருக்கம் செய்யப்பட்டு, மனிதர்கள் படைக்கப்பட்டிருக்க வேண்டும். அந்த மரப்பணுக்களை மனிதர்களிலிருந்தே உற்பத்தி செய்து, மனித சமுதாயத்தை படைத்திருக்க முடியும் என்பது நடைமுறையில் மட்டுமல்லாமல் அறிவியில் உலகிலும் ஒத்துக் கொள்ளப்படும் விஷயமாகும். அந்த மரப்பணுக்களால் மனித சந்ததிகள் எவ்வாறு படைக்கப்படுகின்றனர் என்பதுதான் இந்த மாதத் தொடரின் மையப் பொருளாகும்.

يَا أَيُّهَا النَّاسُ إِنَّا خَلَقْنَاكُمْ مِنْ ذَكَرٍ وَأُنْثَى (الحجرات:13)

மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண் மற்றும் ஒரு பெண்ணிலிருந்து படைத்தோம்.

அல் குர்ஆன்: 49:13

இந்த வசனத்தில் மனிதர்கள் அனைவரும் ஒரு ஆண், பெண்ணிலிருந்துதான் படைக்கப் பட்டனர் என்ற செய்தியை அறிந்து கொள்கிறோம். அதாவது மனிதர்கள் தொடர்ச்சியாக படைக்கப்படுவதற்கு தேவையான மரப்பணுக்களை ஆண் மற்றும் பெண்ணிடம் உற்பத்தி செய்து அதன் மூலம் மனித சமுதாயம் படைக்கப்படுகிறது என்ற உண்மையை புரிந்து கொள்ளலாம்.

விந்துவில் இறைவன் செய்யும் விந்தைகள்

களி மண்ணின் மூலச்சத்திலிருந்து முதல் மனிதரை படைத்த அல்லாஹ் அந்த முதல் மனிதரின் சந்ததிகளை அவரது விந்துவின் மூலத்திலிருந்து படைத்தான்.

ثُمَّ جَعَلَ نَسْلَهُ مِنْ سُلَالَةٍ مِنْ مَاءٍ مَهِينٍ (السجدة:8)

பின்னர் வடிகட்டி எடுக்கப்பட்ட அற்ப நீரில் (இந்திரியத்தில்) இருந்து அவனுடைய சந்ததியை உண்டாக்கினான். அல் குர்ஆன்: 32:8

மனித சந்ததிகளை விந்துவிலிருந்து படைத்த செய்தியை அல்லாஹ் சுமார் 15 இடங்களில் கூறுகிறான். 12 இடத்தில் நுத்ஃபா என்ற வார்த்தையையும், 3 இடத்தில் மாஉ என்ற வார்த்தையையும் பயன்படுத்தி கூறியுள்ளான்.

நுத்ஃபா என்பதற்கு சுத்தமான நீர் என்பது பொருளாகும். ஆணுடைய விந்து, எந்த வித மாசுகளும் சென்றடைந்திராத பாதுகாப்பான இடத்திலிருந்து வெளியேறுவதால் அதற்கு நுத்ஃபா என்ற பெயர் பொருத்தமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஆணுறுப்பிலிருந்து குதித்து வெளியாகும் வழுவழுப்பான திரவத்திற்கு விந்து எனப்படும்.

இந்த விந்துவில் இறைவன் செய்யும் விந்தைகள் இறைவனுக்கு மட்டுமே தெரிந்த வித்தையாகும். அற்பமான ஒரு துளி விந்துவில் பல அதிசயங்கள் நிகழ்த்தியிருப்பது அவனுடைய வியத்தகு அத்தாட்சிகளில் ஒன்றாகும்.

பல நூறு அறிவியல் அறிஞர்களின் கூட்டு முயற்சியால் முதன்முதலாக இயந்திர மனிதன் செய்யப்பட்ட போது, உலகமே வியப்பில் ஆழ்ந்து அது பற்றிய செய்திகள், ஊடகங்களில் பல மாதங்களாக தலைப்பு செய்திகளாக வெளி வந்து கொண்டிருந்தன. இயந்திர மனிதன் ஆற்றும் செயல்பாடுகள் குறித்து அதிசயங்களாக நாம் பேசிக் கொண்டிருந்தோம். அந்த இயந்திர மனிதனை உற்பத்தி செய்வதற்கு பல்வேறு தனிமங்களும், கனிமப் பொருட்களும், முன் மாதிரியும் தேவைப்பட்டன என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயமாகும்.

ஆனால் அந்த இயந்திர மனிதனையும் உருவாக்கும் ஆற்றல்கள் உள்ள நிஜ மனிதனை எந்த முன் மாதிரியும் இல்லாமல் ஒரு துளி இந்திரியத்தில் படைத்திருப்பது பேசித்தீராத அதிசயமாக உள்ளது. விந்துவிலிருந்துதான் மனிதர்கள் படைக்கப்படுகிறார்கள்| என்ற செய்தியையும், அந்த விந்து எங்கிருந்து எவ்வாறு உற்பத்தியாகிறது, அதன் தன்மைகள் எவ்வாறு உள்ளது என்றும் 14 நூற்றாண்டுகளுக்கு முன்பு குர்ஆனில் மிகத் தெளிவாக கூறப்பட்டிருப்பது அதிலும் பேரதிசயமாக உள்ளது. காரணம் மனிதர்கள் எவ்வாறு படைக்கப்படுகின்றனர் அதற்கான மூல விதை என்ன? என்பது பற்றிய அறிவு 18 ம் நூற்றாண்டு வரை அறிவியல் உலகில் யாரும் அறிந்திருக்கவில்லை. 18ம் நூற்றாண்டின் இறுதியில்தான் இந்த உண்மை அறிவியல் அறிஞர்களால் புரிந்து கொள்ளப்பட்டு, அறிவியல் உலகிற்கு விளக்கப்பட்டுள்ளது.

குழந்தை உருவாகுவதற்கு ஆண் மற்றும் பெண்ணின் விந்து அவசியமானதாகும் என்ற அறிவையும் அதன் வெவ்வேறு நிலைகள் பற்றிய விளக்கத்தையும் 1940 ஆண்டுவாக்கில்தான் அந்த அறிவியல் அறிஞர்களால் பெற்றுக் கொள்ள முடிந்தது. ஆனால் குர்ஆன் இந்த தகவலை 14 நூற்றாண்டுகளுக்கு முன்பே கூறிவிட்டது. 49 வது அத்தியாத்தில் 13 வது வசனத்தில் மனிதர்களே! உங்களை ஒரு ஆண் மற்றும் ஒரு பெண்ணிலிருந்து படைத்தோம் என்று கூறும் இறைவேதமான குர்ஆன், 76 வது அத்தியாயம் 2வது வசனத்தில் (ஆண், பெண் ஆகியோரின்) கலப்பான இந்திரியத்துளியிலிருந்து நிச்சயமாக மனிதனை நாம் படைத்தோம் என்றும் கூறுகிறது. இதன் மூலம் குழந்தையின் உற்பத்திக்கு ஆண், பெண் ஆகிய இருவருக்கும் பெரும் பங்கு உள்ளது என்ற உண்மையை தெளிவு படுத்தியுள்ளது.

இந்த உண்மையை ஒரு சாதாரண மனிதனால் நிச்சயமாக சொல்லியிருக்க முடியாது. அதிலும் குறிப்பாக அறிவியல் வாடையே இல்லாத 1400 ஆண்டுகளுக்கு முன்பு இது போன்ற செய்தியை ஒரு மனிதர் சொல்லியிருக்க முடியும் என்பதை கற்பனை செய்துகூட பார்க்கமுடியாது. அனைத்தையும் அறிந்த அல்லாஹ் ஒருவனால்தான் சொல்லியிருக்க முடியும் என்பதை யாரும் மறுக்க இயலாது.

விந்து எவ்வாறு வெளிப்படுகிறது.

**فَلْيَنْظُرِ الْأِنْسَانُ مِمَّ خُلِقَ – خُلِقَ مِنْ مَاءٍ دَافِقٍ – يَخْرُجُ مِنْ بَيْنِ الصُّلْبِ وَالتَّرَائِبِ) (الطارق: 5,6,7)**

ஆகவே மனிதன், (தான்) எதிலிருந்து படைக்கப்பட்டிருக்கிறான் என்பதை அவன் சிந்தித்து பார்க்க வேண்டாமா?

குதித்து வெளியாகும் (ஒரு துளி) நீரிலிருந்து அவன் படைக்கப்பட்டான். அது (ஆணின்) முதுகந் தண்டிற்கும் கடைசி நெஞ்செலும்புகளுக்கும் மத்தியிலிருந்து வெளிப்படுகிறது. (அல் குர்ஆன்: 86:5,6,7)

இந்த வசனத்தின் மூலம் மனிதன் எதிலிருந்து படைக்கப்பட்டான் என்ற தகவலை சிந்தனையோடு பார்க்க வேண்டும் என்று மனிதனை இறைவன் தூண்டுகிறான். அவ்வாறு சிந்திக்கும் போது அற்பமான ஒரு துளி விந்துவில் அல்லாஹ் நிகழ்த்திய அற்புத ஆற்றல்களை புரிந்து கொண்டு, அந்த அல்லாஹ்வை ஏற்று, அவனை அஞ்சி வாழ்வதற்கு அது பெரிதும் துணை புரியும்.

மனிதன் மமதை கொண்டு, படைத்தவனை நம்ப மறுத்து கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என தான்தோன்றித்தனமாக நடந்து, அநியாயமும், அக்கிரமங்களும் செய்து கொண்டிருந்த போதுதான் இறைத்தூதர்களை அனுப்பி வைத்து, மனிதர்கள் திருந்தி வாழ்வதற்கு தேவையான இது போன்ற தகவல்களை அவர்களுக்கு நினைவு படுத்தி, அந்த மனிதர்கள் திருந்தி வாழ்வதற்கு ஒரு சிறந்த வழியினை ஏற்படுத்தி தந்துள்ளான். இது போன்ற தகவலை ஒருவன் சிந்திக்கும் போது, தான் அற்பமானவன், தன்னை இந்த அழகிய தோற்றத்தில் வடிவமைத்து படைத்தவன் மிக சக்தி உள்ளவன் என்ற உண்மையை புரிந்துகொண்டு, தன்னைப்படைத்த அல்லாஹ்வை அஞ்சி வாழ்வான். அதுவே அல்லாஹ்வின் விருப்பமாகும்.

குதித்து வெளியாகும் நீர் என இறைவன் கூறியிருப்பது ஆணும் பெண்ணும் உறவு கொள்ளும் போது ஆணிடமிருந்து வெளியாகும் திரவப் பொருளான விந்துவைத்தான் இங்கு குறிப்பிடுகிறான். சிலர் ஆண், பெண் இருவரிடமிருந்து வெளியாகும் நீர் என்று பொருள் கொள்கிறார்கள். அது தவறாகும். காரணம் பெண்ணினிடம் உற்பத்தியாகும் விந்து, குதித்து வெளியாகும் தன்மையுள்ளதல்ல, அவளிடம் உற்பத்தியாகும் விந்து வெளிக்கு வருவதில்லை. குதித்து, உடலை விட்டும் வெளியாகும் தன்மை ஆணுடைய விந்துவிற்கு மட்டும் உள்ள பண்பாகும். எனவே இந்த வசனத்தில் குதித்து வெளியாகும் நீர் என்பதற்கு ஆணின் விந்து என்றுதான் பொருள் கொள்ள வேண்டும்.

அதிசயப்பிறவியான ஆறறிவு மனிதனைப் படைப்பதற்கு காரணமாக அமைந்துள்ள விந்தை உற்பத்தி செய்து, அதனை முறையாக வெளிப்படுத்தி, உரிய இடத்தில் (கர்பப் பையில்) சேர்த்து வைப்பதில் இறைவன் காட்டும் அதிசயங்கள் தான் எத்தனை? எத்தனை?

சிறுநீர் வெளியாகும் வழியும், விந்து வெளியாகும் வழியும் ஒன்றாக இருந்தாலும் அந்த இரண்டும் கலந்து விடாமல் இருக்க அவன் ஏற்படுத்தியுள்ள தடைகள்தான் எத்தகையது? சிறுநீர் வெளியாகும் போது விந்து வெளிப்படாத படியும், விந்து வெளியாகும் போது சிறுநீர் வெளிப்படாத படியும் ஏற்படுத்தப்பட்டுள்ள தடையின் இரகசியத்தை அதனை படைத்த இறைவனே நன்கு அறிந்தவன். காரணம் மிக நுணுக்கமாக திட்டமிடப்பட்டு, அமைக்கப்படும் பாதுகாப்பான குடிநீர் குழாய், சாக்கடையின் ஓரத்தில் இருக்கம் போது அந்த குழாயின் வழியாக கடத்தப்படும் குடிநீரில் சாக்கடை நீர் கலப்பதை மனித கச்திகளால் தடுக்க முடிவதில்லை. ஆனால் ஒரே உடலில் வெவ்வேறு இடங்களில் உற்பத்தியாகும் திரவங்கள், ஒரே வழியாக வெளிப்பட்டாலும் எந்த காலத்திலும் அந்த இரண்டு திரவங்களும் ஒன்றோடு ஒன்று கலந்து விடமுடியாத படி பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளது இறை சக்தியல்லவா?.

குதித்து வெளியாகும் நீர் என்று கூறப்பட்டிருப்பது சிறுநீரிலிருந்து விந்தை வித்தியாசப்படுத்தி காட்டுவதற்காகவே தெரிவு செய்து போடப்பட்ட வார்த்தை. சிறுநீருக்கு குதித்து வெளியாகும் தன்மையில்லை. விந்து மட்டுமே குதித்து வெளியாகும் தன்மையில் உள்ளதாகும். அந்த தன்மை ஏன் விந்திற்கு மட்டும் உள்ளது என்று சிந்தித்தால் அதிலும் அல்லாஹ் செய்துள்ள அறிவியலின் அற்புத ஆற்றலை புரிந்து கொள்ள முடிகிறது.

பெண்ணிடம் உள்ள கர்பப்பை மிக ஆழத்தில் இருப்பதால் அதனை நோக்கி செலுத்தப்படும் விந்து, சாதாரணமாக வேகமின்றி ஆண் உறுப்பிலிருந்து வெளியாகுமானால் அது கர்ப்பப் பையை சென்றடைவது சாத்தியக்கூறு குறைவு. குதித்த நிலையில் அழுத்தத்துடனும் வீரியத்துடனும் விரைவாக வெளியாகும் போதுதான் அந்த விந்து கர்ப்பப் பையில் சரியான இடத்தை நோக்கி சென்றடைவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளது.

மேலும், இந்த விந்தில் பல கோடி உயிரணுக்கள் உள்ளன. அவைகள் சுயமாக நகர்ந்து முன்னேறும் தன்மை உள்ளவை. எனினும் நகர்ந்து செல்லும் அதன் வேகம் மிகக் குறைவானதே. மேலும் சுமார் 15 நிமிடம் மட்டுமே உயிர் வாழும் தன்மையுடைது. மேலும் உற்பத்தியாகும் உயிரணுக்களில் 20-30 வீத உயிரணுக்கள் மட்டும்தான் முழு

வளர்ச்சியடைந்ததாகவும், நகர்ந்து செல்லும் வீரியமும் உடையதாகும். இந்த குறுகிய கால அவகாசத்திற்குள் கர்ப்பப்பை குழாயை (Fallopian Tube) சென்றடைய வில்லையானால் அந்த உயிரணுக்கள் செத்துப் போய்விடும். விந்து குதித்து வெளியாகுவதால் அது சுமந்து வரும் பெரிய அமானிதமான மனித உயிரணுக்களை விரைவாக உள்ளே தள்ளி, அந்த உயிரணுக்கள் செல்ல வேண்டிய இலக்கான கர்ப்பப்பை குழாயை (Fallopian Tube) விரைவில் சென்றடைவதற்கு பெரிதும் உறுதுணையாக இருக்கிறது. வீரியமின்றி, சாதாரணமாக விந்து வெளியாகுமேயானால் உயிரணுக்கள் சேர வேண்டிய இலக்கை சென்றடையும் வாய்ப்புகள் குறைந்து, செல்லும் வழியிலேயே செத்து மடிந்து விடும்.

மேலும் ஒரு மனித உடலின் சராசரி வெப்ப நிலையில் 37 டிகிரியாகும். ஆணுறுப்பிற்கு கீழே இருக்கும் இனவிருத்தி உயிரணுக்களை உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபட்டிருக்கும் விதையின் வெப்ப நிலை, உடலின் வெப்ப நிலையை விட சுமார் 3-4 டிகிரி குறைவாகவே இருக்கும். காரணம் விந்தில் இருக்கும் பல கோடி உயிரணுக்கள் (இது குறித்து பின்னர் விவரிக்கப்படும்.) 34 டிகிரி வெப்ப நிலையில் தான் உயிர் வாழ முடியும். வெப்ப நிலை அந்த அளவைவிட சற்று அதிகரிக்கும் போது அந்த உயிரணுக்களால் உயிர் வாழ முடியாமல் செத்துவிடும்.

விந்து சிறுநீரைப் போல சாதாரணமாக வெளிப்படுமேயானால் ஆணுறுப்பில் உள்ள கூடுதல் வெப்ப நிலையாலும், சிறுநீரின் வேதிய பொருட்களாலும் அந்த விந்தில் உள்ள உயிரணுக்கள் வரும் வழியிலேயே செத்துபோய்விடும். அதனை கருத்தில் கொண்டுதான் பல கோடி உயிரணுக்களை சுமந்து வரும் விந்தை குதித்து விரைவாக வீரியத்துடன் தனித்து வெளியேறும் தன்மையில் படைத்துள்ளான் இறைவன்.

இன்ஷா அல்லாஹ் தொடரும்

# ~~~~ இறை நினைவுகள் ~~~~

தொடர் - 19 - *மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.*

## இஸ்தி·.ஃபார் - பிழைபொறுப்பு இறைஞ்சுமாறு ஏவுவதும், அதன் சிறப்புகளும்.

அல்லாஹுத்தஆலா கூறுகிறான்: *ஆகவே, நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர (வேறு) நாயன் இல்லை என்று நீர் அறிந்து கொள்வீராக இன்னும் உம்முடைய பாவத்திற்காகவும், மு.ஃமின்களான ஆண்களுக்காகவும், பெண்களுக்காகவும் (பாவ) மன்னிப்புத் தேடுவீராக - அன்றியும் உங்களுடைய நடமாட்டத்தலத்தையும் உங்கள் தங்குமிடங்களையும் அல்லாஹ் நன்கறிகிறான். 47:19*

(நபியே!) நீர் கூறும்; "அவற்றை விட மேலானவை பற்றிய செய்தியை நான் உங்களுக்குச் சொல்லட்டுமா? தக்வா - பயபக்தி உடையவர்களுக்கு, அவர்களுடைய இறைவனிடத்தில் சுவனபதிகள் உண்டு; அவற்றின் கீழ் நீரோடைகள் ஓடிக்கொண்டிருக்கின்றன அவர்கள் அங்கு என்றென்றும் தங்குவார்கள். (அங்கு அவர்களுக்குத்) தூய துணைகள் உண்டு. இன்னும் அல்லாஹ்வின் திருப் பொருத்தமும் உண்டு. அல்லாஹ் தன் அடியார்களை உற்று நோக்குகிறவனாக இருக்கின்றான்.

இத்தகையோர் (தம் இறைவனிடம்); "எங்கள் இறைவனே! நிச்சயமாக நாங்கள் (உன் மீது) நம்பிக்கை கொண்டோம்; எங்களுக்காக எங்கள் பாவங்களை மன்னித்தருள் செய்வாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்து எங்களைக் காப்பாற்றுவாயாக!" என்று கூறுவார்கள். 3:16

இது தொடர்பான திருமறை வசனங்கள் பின்வருமாறு: (47:19) (4:106) (110:3) (110:4-16) (8:33) (3:135)

## இஸ்தி·.ஃபார் செய்வதின் மகிமை

யார் 'இஸ்தி·.ஃபாரை பிழை பொறுப்புத் தேடுவதை அவசியமாக்கிக் கொள்கிறாரோ, அவருக்கு எல்லா நெருக்கடிகளை விட்டும் ஈடேற்றத்தை அல்லாஹ் வழங்குவான். மேலும் எல்லாக் கவலைகளை விட்டும், அவருக்கு நிம்மதியை வழங்குவான். எதிர்பாராத இடத்திலிருந்து அவருக்கு 'ரிஜ்கை இரணத்தை வழங்குவான். (அபூதாவூது)

நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: யார்,

أَسْتَغْفِرُ اللهَ الَّذِى لاَ اِلَهَ هُوَ الْحَيُّ الْقَيُّومُ وَأَتُوبُ اِلَيْهِ

**'அஸ்தஹ்பிருல்லாஹல்லதீ லாயிலாஹ இல்லா ஹுவல் ஹய்யுல் கய்யூம் வஅதூபு இலைஹி**

'நான் அல்லாஹ்விடம் பிழை பொறுப்பு இறைஞ்சுகிறேன். அவனைத் தவிர எந்த நாயனும் கிடையாது. அவன் என்றும் ஜீவித்திருப்பவன் என்றும் நிலைத்திருப்பவன், அவன் பக்கம் தவ்பாச் செய்து மீளுகிறேன் என்று கூறுகிறாரோ, அவரின் பாவங்கள் மன்னிக்கப்படும். அவர் புனிதப் போரில் புறமுதுகு காட்டி ஒடி வந்திருந்த போதிலும் சரியே! (அபூதாவூது, திர்மிதி, ஹாகிம்)

அல்லாஹ்வின் மீது ஆணையாக! நிச்சயமாக ஒவ்வொரு நாளும் எழுபது தடவைகளுக்கும் அதிகமாக நான் அல்லாஹ்விடம் பிழை பொறுப்பு இறைஞ்சுகிறேன். மேலும் அவனளவில் தவ்பாச் செய்கிறேன் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி)

## நூறு முறை இஸ்தி·.ஃபார் செய்தல்

நிச்சயமாக, என் உள்ளத்தின் மீது ஒரு திரை இடப்படுகிறது. நிச்சயமாக, நான் ஒவ்வொரு நாளிலும் நூறு முறை அல்லாஹ்விடம் பிழை பொறுப்பு இறைஞ்சுகிறேன் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

நாங்கள் ஒரு மஜ்லிஸில் நபி(ஸல்) அவர்கள் செய்த 'இஸ்தி·.ஃபாரை எண்ணிப் பார்க்கக் கூடியவர்களாக இருந்தோம். அப்பொழுது நபி(ஸல்) அவர்கள்,

رَبِّ اغْفِرْ لِي وَتُبْ عَلَيَّ إِنَّكَ أَنْتَ التَّوَّابُ الرَّحِيمُ

**'ரப்பி·.ஃபிர் லீ, வதுப் அலய்ய, இன்னக அன்தத் தவ்வாபுர் ரஹீம்**

என் இரட்சகனே! என் பிழைகளைப் பொறுப்பாயாக! என் தவ்பாவை ஏற்றுக் கொள்வாயாக! நிச்சயமாக, நீ தவ்பாவை மிக ஏற்றுக் கொள்பவன். மிகக் கிருபையாளன்.' என நூறு முறை கூறுபவர்களாக இருந்தார்கள். (அபூதாவூது, திர்மிதி)

☆ ☆ ☆

# அறிவு மற்றும் பரிசுப் போட்டி - 5:3

## போட்டிக்குரிய கேள்விகள்

**1. ஹஜ் மற்றும் உம்ராவின் போது அஜருல் அஸ்வத் கல்லை தொடமுடியாதவர்கள் வலது கையை உயர்த்தி தக்பீர் கூறி என்ன செய்ய வேண்டும்?**

a. வலது கையை முத்தமிட வேண்டும்

b. ஒன்றும் செய்ய தேவையில்லை

c. முத்தமிடுவது சுன்னதாகும்

**2. பெண்களுக்கான ஜிஹாத் எது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்**

a. நோன்பு b. ஹஜ் c. ஜகாத்

**3. மனிதர்கள் இரு பெரும் அருட்கொடைகளின் விஷயத்தில் அதிகமாக ஏமாந்து நஷ்டமடைந்து விடுகின்றனர் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் அவை யாவை?**

a. 1. ஆரோக்கியம் 2. செல்வம்

b. 1. ஓய்வு நேரம் 2. அறிவு

c. 1. ஆரோக்கியம் 2. ஓய்வு நேரம்

**4. ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜின் கூலி இதுவென நபி(ஸல்) அவர்கள் எதை கூறினார்கள்?**

a. சொர்க்கத்தை தவிர வேறில்லை

b. ஆரோக்கியத்தை தவிர வேறில்லை

c. நன்மையை தவிர வேறில்லை

**5. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், பனூ இஸ்ராயீல் கூட்டத்தினரில் முதல் முதலாகத் தோன்றியக் குழப்பம் எதனை கொண்டு?**

a. பெண்கள் b. பொருள்கள் c. பதவி

## விதிமுறைகள்

1. உங்களுடைய விடைகளை குறுந்தகவல் (SMS) மூலமாகவும் அனுப்பலாம். கொடுக்கப்பட்டுள்ள ஐந்து கேள்விகளுக்கான பதிலை கீழ்கண்ட வடிவத்தில் அனுப்பவும்.
2. உங்கள் பெயர், அறிவுப் போட்டி எண் (AP No.), விடை (ANS:), பதில்கள் வரிசைப்பிரகாரம் அமைந்திருக்க வேண்டும். உதாரணமாக Abdullah,AP 4:6, ANS: 1a, 2b, 3d, 4b, 5c. என்கிற வகையில் குறுந்தகவல் (SMS) அமைந்திருக்க வேண்டும்.
3. விடைகளை 0506096740 என்கிற எண்ணுக்கு குறுந்தகவல் (SMS) மூலமாகவோ அல்லது suvanam@gmail.com என்கிற மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ அனுப்பலாம். கடிதம் மூலம் அனுப்ப விரும்புவோர் விடைத்தாளை உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில் (புதியது) நேரடியாகக் கொடுக்க வேண்டும்.
4. விடைகளை பிரதிமாதம் பிறை 25ஆம் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டும்.
5. பரிசு பெற்றவர் மற்றும் சரியான விடைகள் அடுத்த மாத இதழில் வெளிவரும்.
6. அதிகபட்ச மதிப்பெண்களை ஒன்றுக்கு மேற்பட்டோர் பெற்றிருந்தால் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
7. ஆசிரியர் முடிவே இறுதியானது.

## ஹஜ்

ஹஜ்ஜையும் உம்ராவையும் அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுங்கள் (2:196)

ஹஜ்ஜுக்குரிய காலம் குறிப்பிடப்பட்ட மாதங்களாகும். எனவே, அவற்றில் எவரேனும் (இஹ்ராம் அணிந்து) ஹஜ்ஜை (தன் மீது) கடமையாக்கிக் கொண்டால், ஹஜ்ஜின் காலத்தில் தாம்பத்ய உறவு கொள்வது, கெட்ட வார்த்தைகள் பேசுதல், சச்சரவு ஆகியவற்றில் ஈடுபடலாகாது. (2:197)

இஸ்லாத்தை ஏற்பது அதற்கு முன்பு நிகழ்ந்த பாவங்களைப் போக்கிவிடுகிறது. ஹிஜ்ரத் (இறைவனுக்காக நாடு துறந்து செல்லல்) அதற்கு முன்நிகழ்ந்த பாவங்களைத் தகர்த்து விடுகிறது. ஹஜ் அதற்கு முன்னர் நிகழ்ந்த பாவங்களைத் தகர்த்து விடுகிறது என்பதை நீர் அறியவில்லையா? என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள்.

அம்ருபின் அல்ஆஸ்(ரலி): முஸ்லிம்

குர்பானி இறைச்சியை உண்ணுங்கள், சேமித்தும் வைத்துக் கொள்ளுங்கள், தர்மமாகவும் வழங்குங்கள்! என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஆயிஷா(ரலி): புகாரி, முஸ்லிம்

உடலுறவு கொள்ளாமல், தீயகாரியங்களில் ஈடுபடாமல் எவரேனும் ஹஜ் செய்தால் அன்று பிறந்த பாலகன் போன்று பாவமற்றவராக அவர் திரும்புகிறார் என நபி(ஸல்) கூறினார்கள்.

அபூஹுரைரா(ரலி): புகாரி

**அறிவுப் போட்டி - 5:2 க்கான பரிசு பெறுபவர் : அப்துர்ரஹீம் (0502723067)**

### அறிவுப் போட்டி - 5:2 க்கான விடைகள்

1. b. இஸ்மாயீல்(அலை)
2. c. யலம்லம்
3. c. வெள்ளி
4. b. மினா
5. b. லுஹர் மற்றும் அஸர்

*பரிசுக்குரியவர், மௌலவி இப்ராஹீம் அவர்களைத் தொடர்பு கொண்டு தனது பரிசை பெற்றுக்கொள்ளவும் (0506625229)*

### திருத்தம்

ஷவ்வால் மாத இதழில் குற்றப்பரிகாரம் என்கிற தலைப்பில், சத்தியத்தை முறித்தவருக்குரிய பரிகாரம் என்கிற குறுந்தலைப்பில் **"பத்து ஏழைகளுக்கு உணவளிப்பது, அல்லது பத்து ஏழைகளுக்கு உடை வாங்கி கொடுப்பது,"** என்பதிற்கு பதிலாக **"ஏழு ஏழைகளுக்கு உணவளிப்பது, ஏழு ஏழைகளுக்கு உடை வாங்கிக் கொடுப்பது"** என தவறாக பிரசுரமாகியுள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.